**சார்பு நீதிமன்றம், அறந்தாங்கி.**

**MCOP.No.74/2023**

மனுதாரர் தரப்பு 1–வது சாட்சி ஜீவா என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி செல்வி.K.தமிழரசி, கிரேடு II பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**சத்தியப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர்.. | ஜீவா | வயது.. | |
| கணவர் பெயர்.. | செல்வராஜ் | தாலுகா | ஆவுடையார்கோவில் |
| கிராமம்.. | ஆலத்தூர் | தொழில்.. | விவசாய வேலை |

நாள்.. 20.01.2026

**<u>PW1–ன் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் எந்த பேருந்தில் எந்த இருக்கையில் அமர்ந்திருந்தேன் என்றால் நடத்துனரின் சீட்டிற்கு பின் சீட்டில் நான் அமர்ந்து இருந்தேன். நான் ஓட்டுநர் சீட்டிற்கு பின்புறம் அமர்ந்து இருந்ததால் இந்த விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. நான் ஓட்டுநர் சீட்டிற்கு பின்புறம் உட்காரவில்லை. நடத்துனர் சீட்டிற்கு பின்புறம்தான் அமர்ந்து இருந்தேன். நான் பயணம் செய்த பேருந்து ரோட்டின் இடபுறமாகத்தான் வந்தது என்றால் சரிதான், ஆனால் லாரி எதிரே வந்த பொழுது பஸ் டிரைவர் தூக்கத்தில் வாகனத்தை ஓட்டி லாரி சைடு மோதிவிட்டார். நான் நடத்துனர் சீட்டிற்கு பின்புறம் பயணம் செய்து நிலையில் ஓட்டுநனர் தூக்கினாரா இல்லையா என்று அங்கிருந்து பார்க்க முடியாது என்றால் சரியல்ல, நான் பார்த்தேன். அவர் தூங்கினார். ஓட்டுநர் தூங்கினார் என்று நான் வழக்கிற்காக பொய்ய சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பஸ்ஸின் ஓட்டுநர் வாகனத்தை கவனமாகவும், மெதுவாகவும் இடதுபுறமாகவும் ஓட்டி வந்தார் என்றும் எதிரே வந்த லாரி ஓட்டுநர்தான் லாரியை அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், கவனக் குறைவாகவும் ஓட்டி பஸ் மீது மோதி இந்த விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. பஸ்ஸின் ஓட்டுநர்தான் அதிவேகமாக பஸ்சை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்திற்கு காரணம் பஸ்ஸின் ஒட்டுநர் அல்ல என்றால் சரியல்ல, அவர்தான் காரணம். லாரியை இயக்கிய ஓட்டுநருக்கு உரிமம் உள்ளதா இல்லையா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த லாரிக்கு விபத்து சமயத்தில் RC FC Insurance உள்ளிட்ட ஆவணங்கள் விபத்து நடந்த சமயத்தில் இருந்ததா என்றால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். எனக்கு மாதம் வருமானம் எவ்வளவு என்றால் எனக்கு ரூ.50,000/– வரும். எனக்கு மாதம் ரூ.50,000/– வருமானம் வருகிறது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக தனி புகார் எதுவும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால்

சரிதான், ஆனால் இந்த விபத்து சம்மந்தமாக நான் மருத்துவமனையில் இருந்த பொழுது போலீஸ் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கிக் கொண்டார்கள். அதேபோல் இந்த பேருந்தில் பயணம் செய்த மற்ற யாரும் தனி புகார் கொடுக்கவில்லை. இவ்வழக்கில் அப்துல்ரகுமான் என்பவர் கொடுத்த புகாரின் பேரில்தான் நான் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அப்துல்ரகுமான் என்பவர் விபத்து நடந்த பேருந்தில் பயணம் செய்யவில்லை என்றால் சரிதான். அப்துல்ரகுமான் லாரி ஓட்டுநருக்கு வேண்டியவர் என்பதால் அவர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பேருந்தை இயக்கி வந்த ஓட்டுநர் பேருந்தை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டி வந்தார் என்றும், லாரியை ஒட்டி வந்த ஓட்டுநர்தான் வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இடது புறமாக வந்த பஸ்ஸின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி லாரி ஓட்டுநரின் கவனக் குறைவால் விபத்து ஏற்பட்டதால் 1ம் எதிர்மனுதாரர் இந்த விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தில் பயணம் செய்தேனா என்றால் சரிதான். இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தின் ஓட்டுநர் பேருந்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக் குறைவாகவும் ஓட்டி 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தின் ஓட்டுநர்தான் காரணம் என்றால் சரிதான். இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பேருந்தின் ஓட்டுநர் மீது அறந்தாங்கி காவல் நிலையத்தின் குற்ற எண்.228/2022 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கோரும் இழப்பீட்டு தொகையை 1ம் எதிர்மனுதாரர் செலுத்தி வைக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். இந்த கோரிக்கை மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/–அ.உமாமகேஸ்வரி,
சார்பு நீதிபதி,
அறந்தாங்கி.